# அவுஸ்திரேலியத் தமிழ் வாக்குக்கணிப்பு 2010

ஒன்றுபட்ட இலங்கைத் தீவுக்குள் தமிழர்க்கான இறமையையும் சம அந்தஸ்த்தையும் பெறுவதற்கு பல்வேறு தமிழ் அமைப்புக்கள் கடந்த 60 வருட காலமாக மேற்கொண்டுவந்த அனைத்து நடவடிக்கைகளும் வெற்றிபெறவில்லை. தமிழர் தமது பாரம்பரிய தாயகத்தை மீளப்பெறுவதற்கும், தமது இறமைக்கான உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்குமென அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளாலும் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று நிகழ்வே வட்டுக்கோட்டைத் தீர்மானமாகும்.

## வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படைகள்

1. ஐரோப்பிய ஆக்கிரமிப்பு இலங்கைத் தீவில் நிகழும் காலப்பகுதிவரை, இலங்கைத் தீவின் வடக்கு கிழக்குப் பிரதேசம் என்பது பல்நூற்றாண்டு காலமாக தமிழர்களின் பாரம்பரிய தாயகமாக இருந்து வந்துள்ளதுடன் அது அவர்களின் பூரண இறமையும் சுதந்திரமும் உள்ள பிரதேசமாக இருந்து வந்துள்ளது.
2. இந்தப் பாரம்பரியப் பிரதேசத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒரு தனியான நாட்டை அடையாளப்படுத்துகிறார்கள். அவ்வாறே இலங்கையின் எந்தப்பாகத்திலும் வசிக்கும் தமிழ் பேசும் மக்களும், வெளிநாடுகளில் வதியும் தமிழ் ஈழத்தை பூர்வீகமாகக் கொண்ட எந்தத் தமிழரும் தமது பாரம்பரிய தாயகத்தில் பிரஜாவுரிமை பெறுவதற்கு உரித்துடையவர்கள்.
3. இந்தத் தமிழ்த்தேசம் சுய நிர்ணய உரிமையைக் கொண்டிருக்கிறது
4. ஈழத் தமிழர்கள் தமது தாயகமான இறமையுள்ள சுதந்திர தமிழ் ஈழத்தை உருவாக்கிக் கட்டியெழுப்புவதில் ஆர்வம் கொண்டுள்ளனர்

## வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீள் வாக்கெடுப்பிற்கான கூற்று

"இலங்கைத் தீவில் வாழும் தமிழர்கள் ஒரு தனியான நாட்டை அடையாளப் படுத்துவதாலும், ஒரு பாரம்பரிய தாயகத்தையும் சுய நிர்ணய உரிமையையும் கொண்டிருப்பதாலும், ஈழத் தமிழனாகிய நான் பூரண இறமையும் சுதந்திரமும் உள்ள தமிழ் ஈழத்தை இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் நிறுவுவதற்கு என் முழு விருப்பத்தையும் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்"

## புலம்பெயர் ஈழத்தமிழரின் பங்கு

சட்டத்திற்கு முரணான வகையில் உருவாக்கப்பட்ட ஒன்றுபட்ட இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் நேரடி விளைவுதான் ஈழத்தமிழரைச் சிதறடித்து உலகம் முழுவதும் தஞ்சமடையச் செய்தமையாகும். தமிழரின் தாயகம் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்டது. மேலும், இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானமானது ஈழத்தை பூர்வீகமாகக் கொண்ட எந்தவொரு தமிழரும் தனது தேசம் சம்பந்தமான எந்த நடவடிக்கைகளில் பங்கெடுப்பதற்கும் தனது கருத்தைத் தெரிவிப்பதற்கும் உரிமையுடையவர் என்றும் தெரிவிக்கிறது.

## அவுஸ்திரேலிய வாக்குக்கணிப்பு 2010 இன் மூலம் நாம் அடைய விரும்புவது என்ன?

1. இலங்கைத் தீவில் வாழும் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை மீள வலியுறுத்துதல்.
2. புலம்பெயர் நாடுகளில் நடாத்தப்படும் இப்படியான கருத்துக்கணிப்புக்களின் முடிவுகள் இனமுரண்பாட்டிற்கான தீர்வினை ஏற்படுத்துவதற்குத் துணைப் புரியும்.
3. தமிழர்களின் அபிலாசைகளை உலக நாடுகளுக்கும், சர்வதேச அமைப்புகளுக்கும் முன்வைப்பதில் இக்கருத்துக்கணிப்பு முடிவுகள் துணைபுரியும்.

4. தேசிய, சர்வதேச மட்டத்தில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான ஒருமைப்பாட்டினை வளர்த்தல்.
5. எமது கடந்தகால அகிம்சை முறைப்போராட்டங்களும் ஆயுதப் போராட்டங்களும் நியாயமானது என்பதை திரும்பவும் உலகுக்கு உணரவைத்தல்.
6. இது எமது இறைமைக்கான நடவடிக்கை என்பதையும் எங்களை ஆளும் இறைமையோ உரிமையோ சிறிலங்காவிற்கு இல்லை என்பதையும் உலகிற்கு உணர்த்துதல்.
7. சிறிலங்காவின் அரசியலமைப்பை மாற்றியமைக்க அழுத்தம் கொடுத்தல்.

## வாக்குக்கணிப்பின் இப்போதைய அவசியம் என்ன?

கடந்த மே மாதம் 2009 இற்குப் பின்னர், ஈழத்தில் தமிழர்க்கான இயங்குநிலை தலமைத்துவத்திற்கான தேவை ஒன்றிருக்கிறது. எமது தாயகத்தையும் போராட்டத்தையும் தலைமை தாங்குவதற்கான பொறுப்பு புலம்பெயர் தமிழர்களிடமே இன்று ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

நீதியானதும், சுதந்திரமானதுமான முறையில் தமிழரின் அரசியல் அபிலாசைகளை அறிந்துகொள்ளவும், அரசியல் அடிப்படைகளை வரையறுத்துக்கொள்ளவும் வேண்டியது இன்று புலம்பெயர் தமிழரைப் பொறுத்தவரையில் அவசியமாகும். இதைச் செய்யும் ஒரு ஜனநாயக வழிமுறை தான் இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்மீதான மிள்வாக்கெடுப்பாகும்.

## அவுஸ்திரேலிய வாக்குக்கணிப்பு 2010 சம்பந்தமான மற்றைய கேள்விகளும் பதில்களும்:

1. 1976 ஆம் ஆண்டின் வட்டுக்கோட்டைத் தீர்மானம் எவ்வாறு அன்று தமிழர்களால் பரீட்சிக்கப்பட்டது?
   இலங்கைத் தீவில் நடைபெற்ற 1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான சர்வஜன வாக்கெடுப்பாகக் கொள்ளப்பட்டு தமிழ் மக்களின் ஆணை பெறப்பட்டது.

2. அவுஸ்திரேலியக் வாக்குக்கணிப்பு 2010 ஏன் வட்டுக்கோட்டைத் தீர்மானம் 1976ஐ அடிப்படையாகக் கொண்டுள்ளது?
   இத்தீர்மானம் 1976 ஆம் ஆண்டு தமிழ் அரசியல் தலைமைத்துவத்தால் உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1977 இல் நடந்த பொதுத் தேர்தலில் தமிழர்கள் தமது தாயகத்தில் இதற்கான ஆணையை ஏக மனதாக வழங்கியிருந்தார்கள். இதுவே தமிழ் ஈழத்தில் (இலங்கைத் தீவின் வடக்குக், கிழக்கு மாகாணங்கள்) இறுதியாக நடந்தேறிய நீதியும் சுதந்திரமுமான தேர்தல் என்பது குறிப்பிடத் தக்கது.

3. அவுஸ்திரேலிய கருத்துக்கணிப்பு எப்போது நடத்தபடவுள்ளது?
   2010ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17ம், 18ம் திகதிகளில்

4. இந்தத் தீர்மானத்தில் நான் பங்குகொள்வது எவ்வாறு?

   நீங்கள் இந்தத் தீர்மானத்தில் கலந்துகொள்வதற்கு எமது இணையத்தளத்தின் மூலமாகவோ அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட தேர்தல் அலுவலகர்கள் வழங்கும் விண்ணப்பப்படிவங்களை நிரப்பி அனுப்புவதன் மூலமோ உங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

5. யார் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள்?
இத்தீர்மான வாக்குக்கணிப்பில் கலந்துகொள்வதற்கு நீங்கள் பின்வரும் தகமைகளைக் கொண்டிருத்தல் அவசியம்,

18 வயதுக்கு மேற்பட்டவராகவும் பின்வரும் மூன்று பிரிவுகளில் ஒன்றில் இடம்பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

அ. இலங்கைத்தீவில் பிறந்தவராகவும் தனது தாய்மொழியாகத் தமிழை கொண்டவராகவும் இருத்தல்.
ஆ. இலங்கையில் பிறந்தவரும், தமிழை தாய்மொழியாகக் கொண்ட வருமான ஒருவரை கணவனாகவோ அல்லது மனைவியாகவோ கொண்டவராக இருத்தல்.
இ. மேலே **அ,** மற்றும் **ஆ** பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவினரின் சந்ததியினராக இருத்தல்.

## 6. இவ்வகையான கருத்துக்கணிப்பு வேறு எங்கிலும் நடந்துள்ளதா?

ஆம். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பு முதன் முதலில் நோர்வேயில் புலம்பெயர் ஈழத்தமிழரால் கடந்த மே மாதம், 2009 இல் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பிரான்ஸ், கனடா, நெதர்லாந்து, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இவ்வாக்குக்கணிப்பு நடாத்தப்பட்டன. இவை எல்லாவற்றிலுமே புலம்பெயர் ஈழத்தமிழர்கள் 99 இற்கும் அதிகாமான வாக்குகளை ஆதரவாக அளித்து தமது அபிலாசைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

மேலும் இவ்வாறான வாக்குக்கணிப்புகள் ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் அவுஸ்திரேலியாவுடன் ஒன்பது நாடுகளில் நடைபெறுவதற்கான ஒழுங்குகளை அந்தந்த நாட்டுப் புலம்பெயர் தமிழர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

## 7. இந்தக் கருத்துக்கணிப்பை நடத்துவது யார்?

1976 ஆம் அண்டில் செய்யப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினை அவுஸ்திரேலியா வாழ் புலம்பெயர் தமிழர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா, இல்லையா என்பதைக் கண்டறியும் முகமாக இங்குள்ள சில தமிழ் ஆர்வலர்களால் “அவுஸ்திரேலியத் தமிழ் வாக்குக்கணிப்புக் குழு” (Tamil Referendum Council Australia - TRCA) என்ற பெயரில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாக்குக் கணிப்பை முறையாக நடாத்தி முடிப்பதே இதன் ஒரேயொரு நோக்கமும் திட்டமுமாகும்.

நன்கு தேர்ச்சியும் அனுபவமும் உள்ள சுயாதீனமான தேர்தல் அமைப்பொன்று இவ்வாக்குக்கணிப்பை (வாக்களிப்பை) நடத்தவிருக்கிறது.

## 8. இத்தீர்மானம் சம்பந்தமான மேலதிகக விபரங்களை நான் எங்கு பெற்றுக் கொள்ளலாம்?

நீங்கள் இக்கருத்துக்கணிப்புத் தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் இணையத்தளங்களின் மூலமாகவோ (www.vkr1976.com.au) அல்லது அவுஸ்திரேலியத் தமிழ் வாக்குக்கணிப்புக் குழு அங்கத்தவர்களிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.